தமிழ்நாட்டில் உச்சத்தில் விலைவாசி!

முதல் பக்கத் தொடர்ச்சி



உணவு பொருட்கள்

உணவு பொருட்களில் வெங்காயத்தின் விலை மிக கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பருடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு செப்டம்பரில் வெங்காயத்தின் பணவீக்கம் 108.09% அதிகரித்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் இது 48.78% ஆக இருந்தது. இதேபோல் இஞ்சியின் விலை கடந்தாண்டு உடன் ஒப்பிடுகையில் இந்தாண்டு 62.85% உயர்ந்துள்ளது. பூண்டின் பணவீக்கம் 54.62% ஆகவும், எலுமிச்சையின் பணவீக்கம் 36.41% ஆகவும் அதிகரித்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் எலுமிச்சையின் பணவீக்கம் 15.15% ஆக இருந்தது. வெள்ளி நகைகளின் பணவீக்கம் 87.80% ஆகப் பதிவாகியுள்ளது.

இந்தாண்டு நகர்ப்புறங்களை காட்டிலும் கிராமப்புறங்களில் பணவீக்கம் அதிகமாக உள்ளது. கிராமப்புறங்களில் சில்லறை பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் 5.24% ஆக இருந்த நிலையில், செப்டம்பரில் 6.08% ஆக உயர்ந்துள்ளது. நகர்ப்புறங்களில் இது 4.31% லிருந்து 4.88%ஆக அதிகரித்துள்ளது. கிராமப்புற உணவு பணவீக்கம் 8.06% ஆகவும், நகர்ப்புற உணவுப் பணவீக்கம் 7.18% ஆகவும் உள்ளது.

விலை குறைந்த பொருள்கள்

அனைத்து பொருட்களின் விலையும் ஒரே மாதிரியாக உயரவில்லை. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது உருளைக்கிழங்கு விலை 11.50% குறைந்துள்ளது. தக்காளி விலை 8.62% சரிந்துள்ளது. மோட்டார் கார்கள் மற்றும் ஜீப்புகளின் விலை 4.51% குறைந்துள்ள நிலையில், வெண்டைக்காய் விலை 4.48%, தேங்காய் விலை 3.99% சரிந்துள்ளது.

உணவகங்கள் மற்றும் ஹோட்டல்கள் 9.36% பணவீக்கம் பதிவாகியுள்ளது. தனிநபர் பராமரிப்பு, சமூக பாதுகாப்பு மற்றும் இதர பொருட்கள், சேவைகள் பிரிவில் விலை உயர்வு 13.75% ஆக உள்ளது. சுகாதாரப் பிரிவில் பணவீக்கம் 1.40% ஆகவும், வீடு, தண்ணீர், மின்சாரம், எரிவாயு உள்ளிட்ட பிரிவுகளில் 2.74% ஆகவும் உள்ளது. 2024 அடிப்படை ஆண்டை கொண்ட கணக்கிடப்பட்ட பணவீக்கத்தில் இந்த செப்டம்பர் மாத பணவீக்கமே அதிகபட்சமாகும்.

ரிசர்வ் வங்கி

ரிசர்வ் வங்கி கடந்த வாரம் தான் ரெப்போ வட்டி விகிதத்தை 0.25% உயர்த்தி 5.50%ஆக நிர்ணயம் செய்திருந்தது. கடந்த 4 ஆண்டுகளில் வட்டி விகிதம் உயர்த்தப்படுவது இதுவே முதல் முறை. அடுத்து டிசம்பர் மாதம் கூட்டம் நடைபெற உள்ள நிலையில் இந்த பணவீக்க டேட்டா எல்லாம் முக்கியத்துவம் பெறுகிறது.

தமிழ்நாடு மோசம்!

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை பொறுத்தவரை புதுச்சேரியில் தான் பணவீக்கம் உச்சத்தில் இருக்கிறது. அங்கு பணவீக்கம் அதிகபட்சமாக 6.86%பதிவாகியுள்ளது. அதற்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் 6.81% பணவீக்கம் பதிவாகியுள்ளது. ஒடிசாவில் 6.70%, மத்திய பிரதேசத்தில் 6.68%, தெலுங்கானாவில் 6.64% பணவீக்கம் பதிவாகியுள்ளது.

அந்துமணி சிந்துமணி



அந்துமணி : ஏண்டி சிந்து: தமிழ்நாடே இருண்டு கிடக்குது: யார் யாரோ எவ்வளவு சொல்லியும் இந்த கையாலாகாத மந்திரி அதைப்பத்தி எல்லாம் கவலைப்படாம, பாக்கெட் நிரம்பினா போதும்ன்னு இஷ்டத்துக்கும் வெளிமார்க்கெட்டிலே மின்சாரத்தை வாங்குறாரே. யாரும் கேக்க மாட்டாங்களா?

சிந்துமணி : ஆமாண்டி அந்து: அவர் எப்ப கரப்ஷன் குமார்ன்னு ஆனாரோ, அப்பவே தன் வேலையை ஆரம்பிச் சிட்டார். முதல் போட்ட அமைச்சர்களே வாயடைச்சு நிக்கறாங்கன்னா பார்த்துக்கோயேன்!

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பேட்டி!

முதல் பக்கத் தொடர்ச்சி

மின்துறையின் ஒட்டுமொத்த நிதிநிலையை சீரழித்துவிடும். திமுக ஆட்சியில் ரூ.20க்கு மின்சாரம் கொள்முதல் செய்ததை விமர்சித்த த.வெ.க. ரூ.35க்கு கொள்முதல் செய்கிறது. 2021 ஆம் ஆண்டு ரூ. 20க்கு மின்சாரம் கொள்முதல் செய்த போது Resign EB Ministerனு பதிவு போட்டாரு இன்றைய மின்துறை அமைச்சர். இன்றைக்கு அவரே ரூ.35க்கு கொள்முதல் பண்றாரு. இப்ப என்ன பண்ண போறாரு? முழுக்க முழுக்க வெளிச்சந்தையில் மின்சாரத்தை வாங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. 29 ஆயிரம் மில்லியன் தி.மு.க. ஆட்சியில் மின் உற்பத்தியில் 29 ஆயிரம் மில்லியனாக உயர்த்தினோம். தமிழகத்திற்கு போக மீதி மின்சாரத்தை மற்ற மாநிலங்களுக்கு விற்பனை செய்தோம். தி.மு.க. ஆட்சியின் போது தமிழகத்தில் மின்உற்பத்தி 20,830 மெகாவாட்டாக இருந்தது.

கலெக்சன் குமாராக செயல்படும் நிர்மல்குமார்!

ஊழலின் ஊற்றாக கலெக்ஷன் குமாராக அமைச்சர் நிர்மல் குமார் செயல்படுகிறார் காணாமல் போன ஹார்ட் டிஸ்க் குறித்து நிர்மல்குமார் ஏன் பேசுவதில்லை?

தமிழ்நாட்டில் மின்துறைக்கு பதவி வகிக்கும் அமைச்சர், தனது துறை குறித்து பேசாமல், பல்வேறு துறைகள் குறித்துதான் பேசுவார்.

முதல்வர் விஜய் பாட்டுப்பாடுவாரா?

தமிழ்நாட்டில் மின்உற்பத் தியை குறைத்து, வெளியில் இருந்து மின்சாரம் வாங்கி த.வெ.க. அரசு ஊழல் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சொந்த உற்பத்தி, வெளிச்சந்தையில் வாங்குவது தொடர்பாக எந்த வெளிப்படை தன்மையும் இல்லாமல் விஜய் அரசு செயல்படுகிறது. மேலும் தேர்தல் பிரச்சாரத்தின் போது மின்சார கொள் முதல் குறித்து பாட்டு பாடிய விஜய், தற்போது அதேபோல் யூனிட்டுக்கு 35 என்று பாட்டு பாடுவாரா?

இவ்வாறு முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேட்டியளித்தார்.

மருத்துவப் பணியாளர்களை உடனே விடுதலை செய்க!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக.14-

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை வருமாறு:-

மருத்துவப் பணியாளர்களை உடனே விடுதலை செய்க!

பேச்சுவார்த்தைக்கு அழைத்து, அவர்களின் கோரிக்கைகளை செயல்படுத்துவது அரசின் கடமையாகும்!

தமிழ்நாடு அரசில் பல ஆண்டுகளாக தற்காலிகப் பணி புரியும் மருத்துவப் பணியாளர்கள் தங்களது நியாயமான கோரிக்கையை வெளியிட, போராட்டம் நடத்துகிறார்கள் என்றால், ஒரு பொறுப்புள்ள அரசு - தமிழ்நாடு அரசு செய்ய வேண்டியது என்ன?

அவர்களை அழைத்துப் பேசி, அவர்களது கோரிக்கைகளை, நியாயத்தை ஏற்க வேண்டியதே ஜனநாயகத்தில் எதிர்பார்க்கவேண்டிய ஒன்று.

அதைவிடுத்து, மகளிரி



டம்கூட காவல்துறையினர், போராட்டக்காரர்கள் என் பதால், முழு பலத்தைப் பயன்படுத்தி, கைது செய்துள்ளது, வேதனையாகவும், வெட்கமாகவும் உள்ளது.

அவர்கள் தங்களது பணியை நிரந்தரம் செய்யக் கேட்கிறார்கள். அதுவும் இந்த த.வெ.க. அரசு பதவிக்கு வருவதற்காக வாக்குறுதிகளை வானளாவிய வகையில் வாரி விட்டது. அதில், இவர்களையெல்லாம் பணி நிரந்தரம் செய்வோம் என்று சொன்னதும் முக்கியமானதாகும்.

விவசாயிகள் போராட்டம் என்றாலோ வீட்டுக் காவல். அரசின் இந்த ஒடுக்குமுறை நடவடிக்கைகள் ஓர் அரசை எங்கே கொண்டு போய் நிறுத்தும் என்பதை வரலாறுகளைப் படித்துப் புரிந்து கொள்வது அவசியம்.

உடனே விடுதலை செய்து, பேச்சுவார்த்தைக்கு அழைத்து, அவர்களின் கோரிக்கையை செயல்படுத்துவது அரசின் கடமையாகும்!

அவர்கள்தான், மக்கள் உயிர் காப்பவர்கள். நோய்த் தடுப்பவர்கள் - அவர்களின் இன்றியமையாக் கடமையைச் சிந்திக்கவேண்டும் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பணி நிரந்தரம் செய்யக் கோரி சென்னையில் போராட்டம்!

மருத்துவமனைப் பணியாளர்கள் 300க்கும் மேற்பட்டோர் குண்டுக்கட்டாக கைது!

போலீசார் சாலையில் தரதரவென இழுத்துச் சென்றதால் பலர் படுகாயம்!

சென்னை, அக்.14-

பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே போராட்டம் நடத்தி வந்த அரசு பன்னோக்கு மருத்துவமனை பணியாளர்கள் 300க்கும் மேற்பட்டோரை போலீசார் வலுக்கட்டாயமாக சாலையில் தரதரவென இழுத்து சென்று கைது செய்தனர். மேலும், போராட்டத்தை தலைமை ஏற்று நடத்திய நிர்வாகிகளை ஓட்டல் அறைகளிலேயே போலீசார் சிறை வைத்ததால் பரபரப்பு ஏற்பட்டது.



தமிழக முழுவதும் உள்ள பன்னோக்கு அரசு மருத்துவமனையில் 13 ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பந்த முறையில் பணியாற்றி வரும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் தங்களை பணி நிரந்தரம் செய்ய கோரியும், மாதம் ஒரு நாள் ஊதியத்துடன் விடுமுறை, அரசு விடுமுறைகளில் தங்களுக்கும் விடுமுறை அளிக்க கோரி பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர். அதேநேரம் சட்டமன்ற தேர்தலின் போது த.வெ.க. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், அரசு பன்னோக்கு மருத்துவமனைகளில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று வாக்குறுதி அளித்தனர்.

நூற்றுக்கணக்கான போலீஸ் குவிப்பு!

ஆனால் த.வெ.க. அரசு ஆட்சிக்கு வந்து 5 மாதங்கள் ஆன நிலையில் தேர்தலின் போது அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாததை கண்டித்து தமிழகம் முழுவதும் உள்ள அரசு பன்னோக்கு மருத்துவமனையில் பணியாற்றி வரும் ஒப்பந்த பணியாளர்கள் நேற்று காலை 10 மணி அளவில் எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் மைதானம் அருகே போராட்டம் நடத்த எழும்பூர் காவல் நிலையத்தில் அனுமதி கோரினர். ஆனால் போலீசார் போராட்டத்திற்கு அனுமதி அளிக்கவில்லை.

இதையடுத்து, பன்னோக்கு அரசு மருத்துவமனை பணியாளர்கள் திட்டமிட்டப்படி போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தனர். பின்னர் போராட்டத்தை கட்டுப்படுத்தும் வகையில் 200க்கும் மேற்பட்டபோலீசார் எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே சாலையில் தடுப்புகள் அமைத்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். தடையை மீறி போராட்டத்தில் ஈடுபடும் பணியாளர்களை கைது செய்து ஏற்றும் வகையில் 5க்கும் மேற்பட்ட பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டது.

அப்போது திட்டமிட்டப்படி தமிழகம் முழுவதிலும் இருந்து அரசு பன்னோக்கு மருத்துவமனைகளில் பணியாற்றும் ஒப்பந்த பணியாளர்கள் 300க்கும் மேற்பட்டோர் ஒன்று கூடினர். இதை கவனித்த பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவர்களை தடுத்து பேருந்து களில் ஏற்ற முயன்றனர். இதனால் ஆத்திரமடைந்த பணியாளர்கள் திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில் போலீ சார் சாலை மறியலில் ஈடுபட்ட பணியாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி னர். ஆனால் அவர்கள். எங்கள் கோரிக்கையை அரசு ஏற்கும் வரை நாங்கள் இங்கிருந்து கலைந்து செல்ல மாட்டோம் என்று கூறி அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

பின்னர் பேச்சு வாத்தை தோல்வியில் முடிந்ததை தொடர்ந்து போலீசார் சாலை மறியலில் ஈடுபட்ட பணியாளர்களை கைது செய்ய முயன்றனர். இதனால் போலீசாருக்கம் போராட்டக்காரர்களுக்கும் இடையே கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் போலீசார் மறியலில் ஈடுபட்ட அனைவரையும் குண்டு கட்டாக கைது செய்தனர். ஆனால் மறியலில் ஈடுபட்ட பணியாளர்கள் சாலையில் படுத்துக் கொண்டு கைது செய்ய முயன்ற போலீசாரை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர். இதனால் சிறிது நேரம் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இருந்தாலும் போலீசார் பெண் பணியாளர்கள் என்றும் பாராமல் ஆண் காவலர்கள் உதவியுடன் தரதரவென இழுத்துச் சென்று பேருந்துகளில் ஏற்றினர். பலர் இதில் படுகாயமடைந்தனர். இருந்தாலும் போலீசார் போராட்டத்திற்கு வந்த ஒருவரையும் விடாமல் துரத்தி சென்று கைது செய்தனர். ஒருவரை கைது செய்ய 10 போலீசார் பயன்படுத்தப்பட்டது. அதில் பெண் பணியாளர்கள் மயங்கி விழுந்தனர்.

ஆனால் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்லாமல் பேருந்துகளில் ஏற்றி சென்றனர்.

ஓட்டலில் சிறை வைப்பு!

அதேநேரம் எழும்பூரில் ஓட்டலில் தங்கி இருந்த போராட்டத்தை தலைமை ஏற்று நடத்தும் அரசு பன்னோக்கு பணி யாளர்களின் நிர்வாகிகள் பலரை போலீசார், ஓட்டலிலேயே சிறை வைத்தனர். மேலும் வெளி மாவட்டங்களில் இருந்து எழும்பூர் நோக்கி வந்த பணியாளர்கள் பலரை கிளாம் பாக்கம் பேருந்து நிலையம், கோயம்பேடு பேருந்து நிலையங்களில் போலீசார் தடுத்து திருப்பி அனுப்பினர்.

தமிழகம் முழுவதும் 13 ஆண்டுகளாக பணி நிரந்தரம் செய்யக் கோரி போராட்டம் நடத்த வந்த அரசு பன்னோக்கு பணியாளர்களை போலீ சார் மூலம் த.வெ.க. அரசு அடக்கு முறையில் ஈடுபடுவதாக பலவேறு அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தண்ணீர் திறக்க கர்நாடகத்துக்கு அழுத்தம் கொடுக்க விவசாயிகள் கோரிக்கை!

சென்னை, அக். 14-

தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி காவிரியில் தண்ணீர் திறக்கக் கோரி கர்நாடக அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என கல்லணைக் கால்வாய் பாசனதாரர் மற்றும் விவசாயிகள் ஒருங்கிணைப்புச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அதன் தலைவர் கொக்குமடை டி. ரமேஷ், முதல்வருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனு விவரம்: மேட்டூர் அணையில் இருந்து கடந்த செப். 1ஆம்தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டு 40 நாள்கள் நிறைவடைந்து விட்டது. தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டிருக்கிறது. கடைமடைக்கு தண்ணீர் வந்து சேரவில்லை. தற்போது 65 அடிக்கு தண்ணீர் மேட்டூரில் உள்ளது. கடந்த காலங்களில் 40 அடி தண்ணீர் இருந்தபோதும் விவசாயத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

தற்போதுவரை கர்நாடகம் தமிழ்நாட்டுக்கு 814 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டியுள்ளது. எனவே, தினமும் ஒரு டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகத்திடமிருந்து பெற வேண்டும். இதற்காக தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அழுத்தம் கொடுக்க வேண்டும்.



தாம்பரம் மாநகர 53 ஆவது வட்ட பொருளாளரும் காஞ்சி வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி தலைவருமான சிப்ஸ் மணி (எ) கே.சுப்பிரமணி இயற்கை எய்தினார். தகவலறிந்து அன்னாரின் உடலுக்கு தலைமை கழகத்தின் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் ஆகியோர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர். இதில் காஞ்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், தா.மோ.அன்பரசன், தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, கழக வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம், மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி, ஜெயராம் மார்த்தாண்டம், எஸ்.சேகர்.பெர்ணட், த.ஜெயக்குமார், தேவேந்திரன், இரா.செல்வகுமார், டி.ஆர்.முரளி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.